Reg. No. : ....................................

Name : ..........................................

# FY-820

**IMPROVEMENT / SUPPLEMENTARY EXAMINATION, OCTOBER 2022**

Part – III

**TAMIL (Optional)**

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool-off time : 15 Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

**1 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு எவையேனும் எட்டனுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள். மதிப்பெண் 1 வீதம். (8 × 1 = 8)**

1. ஐயத்தைப் போக்கிக் கொள்ள வினவுவது ?

(அ) ஐய வினா (ஆ) அறிவினா

(இ) அறியா வினா (ஈ) ஏவல் வினா

2. சொல்லைக் குறிக்கும் மற்றொரு சொல் ?

(அ) கிழவி (ஆ) கிளவி

(இ) குளவி (ஈ) குழவி

3. 'Folklore' என்ற ஆங்கிலச் சொல்லை உருவாக்கியவர் ?

(அ) ஆறு. இராமநாதன் (ஆ) நா. வானமாமலை

(இ) வில்லியம் ஜான் தாமஸ் (ஈ) இவர்களுள் எவருமில்லை.

4. ஜப்பானின் மிகப் பழமையான கவிதை வடிவம்?

(அ) கட்டவ்டா (ஆ) செடோகா

(இ) சோகா (ஈ) தான்கா

5. பாலு மகேந்திரா நண்பர்களுடன் இணைந்து நடத்திய இலக்கியப் பத்திரிக்கை எது?

(அ) கல்கி (ஆ) ஆனந்த விகடன்

(இ) தேனருவி (ஈ) குமுதம்

6. அடுக்குத்தொடர் அல்லாத சொல் எது?

(அ) வா! வா! (ஆ) போ! போ!

(இ) வருக! வருக! (ஈ) கல கல

7. 'திரிகடுகம்' என்ற பதினென்கீழ்க்கணக்கு நூலின் ஆசிரியர்?

(அ) நல்லாதனார் (ஆ) கணிமேதாவியார்

(இ) பூதஞ்சேந்தனார் (ஈ) விளம்பி நாகனார்

8. புதுக்கவிதை என்ற இலக்கிய வகையைத் தோற்றுவித்தவர்?

(அ) டி.எஸ் எலியட் (ஆ) வாலட் விட்மன்

(இ) எஸ்ரா பவுண்ட் (ஈ) மு. மேத்தா

9. முப்பால் பிரிவுகளைக் கொண்ட அறநூல்?

(அ) ஏலாதி (ஆ) நான்மணிக்கடிகை

(இ) நாலடியார் (ஈ) இனியவை நாற்பது

10. சொக்கநாதக் கடவுளிடம் தமிழைத் தூது அனுப்புவதற்காகப் பாடப் பெற்ற நூல் எது?

(அ) நந்திக்கலம்பகம் (ஆ) குற்றாலக் குறவஞ்சி

(இ) திருக்கைலாய ஞான உலா (ஈ) தமிழ் விடு தூது

**11 முதல் 18 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு இரண்டு வாக்கியங்களில் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 2 வீதம். (6× 2 = 12)**

11. புதுக்கவிதைக்குரிய இரண்டு இயல்புகளை எழுதுங்கள்.

12. பின்வரும் சொற்களை அகரவரிசைப்படுத்தி எழுதுங்கள்.
(அஞ்சி, துகில், மந்தி, வைகல்)

13. அசையின் இரு வகைகளைக் குறிப்பிடுங்கள்.

14. பின்வரும் சொற்களுள் பண்புப் பெயர்களை மட்டும் எடுத்தெழுதுங்கள்.
(வெப்பம், மலை, குளிர், மரம்)

15. ஹைகூவின் இரு கவிதை வடிவங்களை எழுதுங்கள்.

16. 'திருக்குறள்' குறிப்பு எழுதுங்கள்.

17. செம்மொழியின் தகுதிப்பாடுகளில் இரண்டினை எழுதுங்கள்.

18. மொழியியலின் இரண்டு அடிப்படைக் கூறுகளை எழுதுங்கள்.

**19 முதல் 25 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு அரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 4 வீதம். (5 × 4 = 20)**

19. சரியானவற்றைப் பொருத்தி எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| (அ) அன்னிதாமசு | – | மொழியியலில் ஒலியியல் |
| (ஆ) பாரதிதாசன் | – | மொழி |
| (இ) வேழவேந்தன் | – | எங்கள் தமிழ் |
| (ஈ) ரா. சுப்பையா | – | எது தமிழ்ச் செல்வம்? |

20. தகவல் தொழில்நுட்ப தினத்தை முன்னிட்டு உங்கள் பள்ளியில் வெளிவரவிருக்கின்ற தொழில்நுட்ப மலரில் வெளியிட 'இணையதளங்களை முறையாகப் பயன்படுத்தும் வழிமுறைகள்' என்ற தலைப்பில் பெட்டிச் செய்தி தயார் செய்யுங்கள்.

21. மரங்களைப் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, துண்டுபிரசுரம் தயார் செய்யுங்கள்.

22. உமக்குத் தெரிந்த ஏதேனும் நான்கு பழமொழிகளை எழுதுங்கள்

23. பொன்னிறத்தாள் கதைப்பாடலின் மையக்கருத்தைக் குறித்து விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.

24. பின்வரும் பகுதியைத் தூய தமிழ்ப்படுத்தி எழுதுங்கள்.

"அன்னத்தின் வாயைக் கிளற வேண்டியது. சாதத்தையெல்லாம் எடுத்து வெச்சுட்டு வேலைக்குப் போயிட்டாளா? கட்டிலோட கட்டிலா கிடக்கிற ஒரு நோயாளி ஜீவனுக்கு சோறு போடக்கூட நேரமில்லையாக்கும் என்று தூண்டிவிடுவா. அவ ஓர் அப்பாவி வீட்டுக்கு வந்த மூஞ்சிய தூக்கி வச்சுண்டு பேசவே மாட்டா"

25. கீழே தரப்பட்டுள்ள செய்யுளை நயம் பாராட்டி எழுதுங்கள்.

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந்தனவே"

– குறுந்தொகை

**26 முதல் 32 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் நான்றனுக்கு ஒன்றரைப் பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 6 வீதம்.** **($4 \times 6 = 24$)**

26. புதுக்கவிதைகள் காட்டும் சமூகப் பிரச்சனைகளை நும் பாடப்பகுதி கொண்டு விளக்கக் கட்டுரை எழுதுங்கள்.

27. 'தங்க மீன்கள்' திரைப்படத்தின் சிறப்பினை எடுத்துக்கூறி அதன் இயக்குநர் திரு. ராம் அவர்களுக்குப் பாராட்டுக் கடிதம் தயார் செய்யுங்கள்.

28. 'வாய்மொழி இலக்கியங்கள் வாழ்க்கையின் பிரதிபலிப்பே' என்ற தலைப்பில் தொலைக்காட்சி உரை தயார் செய்யுங்கள்.

29. 'போரினால் மக்கள் நேரிடும் அவலங்கள்' என்ற தலைப்பில் பத்திரிக்கைச் செய்தி தயார் செய்யுங்கள்.

30. உங்கள் பள்ளிக் கலை விழாவிற்கு வருகை தரவிருக்கும் தோல்பாவைக் கூத்துக் கலைஞரிடம் வினவுவதற்காக ஐந்து வினாக்கள் அடங்கிய வினாநிரல் தயார் செய்யுங்கள்.

31. நகரமயமாதலால் இயற்கை அடைந்துவரும் மாற்றங்கள் ஏராளம். அம்மாற்றத்திற்கான காரணங்களை எடுத்துக்கூறி பத்திரிக்கைக்கு அனுப்ப, 'நகரமயமாக்கம் : விளைவுகளும் தீர்வுகளும்' என்ற தலைப்பில் தலையங்கம் தயார் செய்யுங்கள்.

32. கீழ்வரும் பாடல்களை ஒப்பிட்டு, ஒப்பீட்டுக் குறிப்பு தயார் செய்யுங்கள்.

"இருந்தமிழே யுன்னாலிருந்தே னிமையோர்

விருந்தமிழ்த மென்றாலும் வேண்பேன்"

-தமிழ் விடு தூது

"தமிழுண்டு தமிழ் மக்களுண்டு – இன்பத்

தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு

தமிழ் என்று தோள் தட்டி ஆடு – நல்ல

தமிழ் வெல்க! வெல்க! என்றே தினம்பாடு"

- பாரதிதாசன்

**33 முதல் 35 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 8 வீதம். (8 × 2 = 16)**

33. இணையத்தமிழ் மாநாட்டையொட்டி நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் பங்கேற்று உரையாற்றுவதற்காக, 'இணையமும் இலக்கிய வளர்ச்சியும்' என்ற தலைப்பில் சொற்பொழிவு தயார் செய்யுங்கள்.

குறிப்புகள் :

★ இணையத்தில் ஈடில்லா வளர்ச்சி

★ இணைய இதழ்கள் – நூல்கள்

★ இணைய வழி – இலக்கிய கருத்தரங்குகள்

★ உலகளாவிய இலக்கிய வளர்ச்சிக்கு வித்திடல்

34. அப்துல் ரகுமானின் 'மானுடம்' என்ற கவிதையை விமர்சித்து விமர்சனக் கட்டுரை எழுதுங்கள்.

குறிப்புகள் :

★ இயற்கை – செயற்கை வேறுபாடு

★ மனித வாழ்க்கை அமைய வேண்டிய விதம்

★ மனித நேயமின்மைச் செயல்கள்

★ மானிட மகத்துவத்தை உணர்த்தல்

35. பள்ளி இலக்கிய மலரில் வெளியிடும் பொருட்டு, 'வாய்மொழிப் பாடல்களும் வாழ்வியல் கூறுகளும்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.

குறிப்புகள் :

★ தாலாட்டு

★ மங்கல வாழ்த்து

★ இல்லறம்

★ ஒப்பாரி